ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2054/39 - 2018 ජනවාරි මස 17 වැනි බදාදා - 2018.01.17

*2054/39 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் வல்மோருவ நீர்த்தாங்கியை நிர்மாணிப்பதற்காக மாற்றீடான காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2018, சனவரி 10,*
*5/ 2/ 1/ 1334.*

**அட்டவணை**

மாத்தளை மாவட்டத்தில், பல்லேபொல பிரதேச செயலகப் பிரிவில், கொஹொலன்வெவ கிராம அலுவலர் பிரிவில் ஹோமாபொல கிராமத்தில் அமைந்துள்ள எஹெல்லேபொல வத்த என்றழைக்கப்படும் காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளரின் திட்டவரைபட இலக்கம் 1829 இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 25 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | திரு. டி. எம். எஸ். உதயகுமார உரிமை கோருகின்ற காணி ; |
| கிழக்கு | : | இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ; |
| தெற்கு | : | ஆர். எம். அபேசிங்ஹ உரிமை கோருகின்ற காணி ; |
| மேற்கு | : | வதுவலயில் இருந்து பிரதான வீதி வரையான வீதிக்காப்பு. |

*காணிக்கு உரிமைகோருகின்றவரின் பெயரும் முகவரியும் :* (1) திரு. பஸ்நாயக முதியன்செலாகே தயாநந்த,
ஹோமாபொல ஜனபதய,
நாலன்த.

*02-130*

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின்கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு பன்னல - மாகதுர - குளியாபிடிய நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் வேலைப் பொறுப்பதிகாரி உத்தியோகபூர்வ விடுதியை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2018, சனவரி 10,
5/2/2/1335.

**அட்டவணை**

குருநாகலை மாவட்டத்தில், பன்னல பிரதேச செயலகப் பிரிவில், படபெத்த கிராம அலுவலர் பிரிவில் படபெத்த கிராமத்தில் அமைந்துள்ள படபெத்த வத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 02 ஏக்கர் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள இரண்டு காணிப்பகுதிகள் :-

**துண்டு இலக்கம் : 01 - விஸ்தீரணம் : 01 ஏக்கர் 03 றூட் 24.2 பேர்ச்சஸ்**

வடக்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி ;
கிழக்கு : துண்டு இலக்கம் 2 மற்றும் இறுதிக் கிராம நிலவரைபட இலக்கம் 316 இல் துண்டு இலக்கம் 38 ;
தெற்கு : திருமதி ஜே. எச். ஹேமாவதி ஜயசிங்ஹ அவர்கள், திரு. டபிள்யு. ஏ. ரோஹன அஜித் அவர்கள் மற்றும் திரு. கித்சிறி ஆப்ரூ அவர்கள் உரிமை கோருகின்ற காணி ;
மேற்கு : வீடுகளில் இருந்து பன்னல - நீர்கொழும்பு பிரதான வீதிக்குச் செல்லும் பாதை.

**துண்டு இலக்கம் : 02 - விஸ்தீரணம் : 0 ஏக்கர் 0 றூட் 15.8 பேர்ச்சஸ்**

வடக்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி ;
கிழக்கு : பொது வீதி ;
தெற்கு : இறுதிக் கிராம நிலவரைபட இலக்கம் 316 இல் துண்டு இலக்கம் 38 ;
மேற்கு : துண்டு இலக்கம் 01.

*காணிக்கு உரிமைகோருகின்றவரின் பெயரும் முகவரியும் :* (1) தலைவர்,
இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்தி சபை,
காலி வீதி, கடுபெத்த,
மொரட்டுவை.

*02-131*

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின்கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு கொழும்பு கிழக்கு நகர் நீர் வழங்கல் நடவடிக்கையின் பொருட்டு முகாமையாளர்/பிராந்திய பொறியியலாளர் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2018, சனவரி 10,*
*5/2/2/1303.*

**அட்டவணை**

*கொழும்பு மாவட்டத்தில், சீதாவக பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 443/சீ, இஹல ஹங்வெல்ல தெற்கு கிராம அலுவலர் பிரிவில் இஹல ஹங்வெல்ல கிராமத்தில் அமைந்துள்ள ஹங்வெல்லவத்த என்றழைக்கப்படும் காணியில் இருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. கே. ஜீ. என். எம். ஜே. சுரங்க அவர்களினால் 2017.03.27 ஆந் திகதியுடையதாக தயாரிக்கப்பட்டுள்ள 2017/1001 ஆம் இலக்க வரைவில் துண்டிலக்கம் 2 எனக் குறித்துக்காட்டப்பட்டுள்ள முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 31.08 பேர்ச்சஸ் (ஹெக்டயார் 0.0786) விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-*

*வடக்கு : ஹய்லெவல் வீதி மற்றும் உட்பிரவேச வழி ;*
*கிழக்கு : உட்பிரவேச வழி மற்றும் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபைக் காணி ;*
*தெற்கு : தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபைக் காணி மற்றும் ஹங்வெல்லவத்த என்றழைக்கப்படும் காணியின் ஒரு பகுதி ;*
*மேற்கு : ஹங்வெல்லவத்த என்றழைக்கப்படும் காணியின் ஒரு பகுதி மற்றும் ஹய்லெவல் வீதி.*

*காணிக்கு உரிமைகோருகின்றவரின் பெயரும் முகவரியும் : (1) திருமதி எஸ். தர்மசேன அவர்கள் மற்றும் பலர்,*
*இல. 6, லொன்டன் பிளேஸ்,*
*கொழும்பு 07.*

*02-132*

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின்கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு கண்டி வடக்கு - பாததும்பறை கூட்டிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் உத்தேச கிராகடுவ நீர்த்தேக்கத்தின் நீர் கடத்தல்*

குழாயை பதிப்பதற்காக இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2018, சனவரி 10,
5/2/1/1336.

**அட்டவணை**

கண்டி மாவட்டத்தில், பாததும்பறை பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 631, கிராகடுவ கிராம அலுவலர் பிரிவில் கிராகடுவ கிராமத்தில் அமைந்துள்ள (காணியின் பெயர் தெரியாது) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ள காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து 1.5 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-

வடக்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி ;
கிழக்கு : அபகஹமுதன வீதி ;
தெற்கு : திருமதி டீ. ஜீ. கமலாவதி மெனிகே உரிமை கோருகின்ற காணி மற்றும் சுவீகரித்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள துண்டு இலக்கம் 03 ;
மேற்கு : சுவீகரித்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி.

காணிக்கு உரிமைகோருகின்றவரின் பெயரும் முகவரியும் : திரு. எச். எம். எம். டீ. பி. ஹேரத்,
இலக்கம் 34/2, மண்தண்டாவெல,
ஜம்புகஹபிடிய.

02-133

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.